

ஆல்பம் 34 பாடல் 7

பாபிலோனே! பாபிலோனே! – சங்கீதம் 137.
பாபிலோன் சிறையில் இருந்து
எருசலேமை நினைத்து அழுதல்.
அல்லேலூயா!

Album 34 Song 7
Babylon, O Babylon – Psalm 137.
By the rivers of Babylon, we wept
when we remembered Zion.
Hallelujah!

Song 7 பாபிலோனே பாபிலோனே
137 சங்கீதம்

Psalm 137 is a lament written during the Babylonian exile. The people remember Jerusalem with deep sorrow while living as captives in a foreign land. It expresses strong love for Zion and a cry for justice.

பாபிலோனே! பாபிலோனே!
எங்களை சிறைப்பிடித்துப் போன பாபிலோனே
பாபிலோனே! பாபிலோனே!
எங்களைப் பாழாக்கிப் போன பாபிலோனே?

சீயோனில் பாடின பாட்டை
உங்களுக்கு பாட வேண்டுமோ?
கர்த்தருக்காய் பாடின பாட்டை
உன் தேசத்தில் பாடுவேனோ?

பாபிலோனே! பாபிலோனே!
எங்களை சிறைப்பிடித்துப் போன பாபிலோனே
பாபிலோனே! பாபிலோனே!
எங்களைப் பாழாக்கிப் போன பாபிலோனே?

பாபிலோனின் நடுவிலிருக்கும்
அலரிச்செடிகளின் மேல்
எங்களின் கின்னரங்களைத்
தூக்கி வைப்போமோ?

பாபிலோனே! பாபிலோனே!
எங்களை சிறைப்பிடித்துப் போன பாபிலோனே
பாபிலோனே! பாபிலோனே!
எங்களைப் பாழாக்கிப் போன பாபிலோனே?

பாபிலோன் ஆறுகள் அருகே
நாங்கள் உட்கார்ந்து
சீயோன் பட்ட வேதனைகளை
நினைத்து அழுதோமே!

பாபிலோனே! பாபிலோனே!
எங்களை சிறைப்பிடித்துப் போன பாபிலோனே
பாபிலோனே! பாபிலோனே!
எங்களைப் பாழாக்கிப் போன பாபிலோனே?

பாபிலோன் குமாரத்தியே
பாழாய்ப் போகிறவளே
நீ செய்த தீங்கிற்கு
உன் பிள்ளைகளை மோதியடிப்போம்

பாபிலோனே! பாபிலோனே!
எங்களை சிறைப்பிடித்துப் போன பாபிலோனே
பாபிலோனே! பாபிலோனே!
எங்களைப் பாழாக்கிப் போன பாபிலோனே?

எருசலேமே! எருசலேமே!
நாங்கள் உன்னை மறந்து போகமாட்டோம்
எருசலேமே! எருசலேமே!
எங்களின் வலதுகையால் தொழிலை செய்திடுவோம்

நாங்கள் உன்னை மறந்து
அதிகமாய் எண்ணாமல் போனால்
எங்களின் நாவு எங்கள் மேல்
வாயோடு ஒட்டிக் கொள்ளட்டும்

எருசலேமே! எருசலேமே!
நாங்கள் உன்னை மறந்து போகமாட்டோம் ?



எருசலேமே! எருசலேமே!
எங்களின் வலதுகையால் தொழிலை செய்திடுவோம்?

எருசலேமை இடித்துப்போடுங்கள்
அஸ்திபாரத்தையும் அகற்றிப் போடுங்கள்
என்றுசொன்ன ஏதோமின் புத்திரரை
கர்த்தாவே தீர்பின் நாளில் நினைத்திடும்

எருசலேமே! எருசலேமே!
நாங்கள் உன்னை மறந்து போகமாட்டோம்
எருசலேமே! எருசலேமே!
எங்களின் வலதுகையால் தொழிலை செய்திடுவோம்

மர்ம பாபிலோனே! மர்ம பாபிலோனே!
பல ஜலங்களின்மேல் வீற்றிருக்கும் மகா வேசியே,
பூமியின் அருவருப்புகளுக்கெல்லாம் தாயே!
விழுந்தது! விழுந்தது பெரிய பாபிலோன்!
பிசாசுகளின் இருப்பிடமாகி,
அசுத்த ஆவிகளின் கூடாரமாகி,
ஒரு மணி நேரத்தில் அதன் நியாயத்தீர்ப்பு வந்தது.
அதன் புகை என்றென்றும் எழும்பும்.